ஓலை 72 | ஓசை 195 | ஜூன் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

## பொருள்

பிறர் சொல்லும் இனிய சொற்கள், இன்பம் தருவதை உணர்ந்தவன், பிறர்க்கும் தனக்கும் துன்பம் தரும் கடும் சொற்களைப் பேசுவது என்ன பயன் கருதியோ!?

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

# அறிவியலில் வெற்றிக்காண்!

பா வகை: தெம்பா(மா)ங்கு

இயக்குகின்ற ஆற்றலையும்
இயங்குகின்ற ஆற்றலையும்
இயல்பறிந்து கற்றிடடா - கண்மணியே
இரட்டிப்பாய் உயர்ந்திடுவாய் - பொன்மணியே

விதையறிந்து வேரறிந்து
வினையாற்று அறிவியலில்
மதிப்பறிந்து மாண்பறிந்து - பட்டுப்பூவே
மலர்ந்திடுவாய் அறிவியலில் - குட்டிப்பூவே



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# தன்முனைக் கவிதைகள்

செல்வம் தேடுவதற்கு
ஒதுக்கிய காலம் போதும்
அனுபவிப்பதற்கும் காலத்தை
ஒதுக்கிக் கொள்ளலாம்

திறமையை முறையாகப்
பயன்படுத்தினால் நீ முதலாளி
திறமையை மற்றவருக்குக்
கொடுத்தால் நீ தொழிலாளி

மற்றவர்களுக்குப் பகிரும் போது
நல்லவற்றைப் பகிர்வோம்
முகநூல் பதிவுகளைப்
பகிர்வதற்கு முன் ஆராய்வோம்

நம்மைப் புரிந்தவர்களுக்கு
நல்ல புத்தகமாக இருப்போம்
புரிந்து கொள்ளாதவர்களிடத்தில்
புதிராகவே இருந்திடுவோம்

இன்றைய சிரிப்பு நாளைய
அழுகையாக மாறக்கூடாது
அழுகையைத் தடுப்பதற்கு
சிந்தித்துச் சிரிப்போம்

தீயோர் நட்பு என்றும்
தீமையைத் தான் வளர்க்கும்
பன்றியோடு சேர்ந்த கன்றும்
மலம் தான் தின்னும்

நல்லவர்களுடன் தொடர்பு
நம்மையும் உயர்த்தி விடும்
பூவோடு சேர்ந்த நாரும்
மணப்பது இயல்பாகும்

உடல் உழைப்பே
வியர்வையை வர வைக்கும்
அக்கினி வெயிலோ
அனைவரையும் வியர்க்க வைக்கும்

மற்றவர் செய்யும்
தவறையும் தேடுங்கள்
தவறு விடாமல் வாழ
படிப்பினைகள் கிடைக்கும்

கவிஞர் சே.சா. ஸ்ரீதரன், இலங்கை

# தன்முனைக் கவிதைகள்

அம்மா அப்பா
வந்தார்கள்.
அம்மாவோ அப்பாவோ
இன்று
நிச்சயம் வருவார்கள்.



என் வீட்டு மதில்மேல்
அடிக்கடி காகம்
கரைந்து கொண்டே இருக்கிறது.

நன்றி காகமே!

அவர்கள் வரவில்லை.
ஞாபகம் வந்தது.

அப்பா கைகள்
தோள் தட்டியது!
அம்மா விரல்கள்
தலை கோதியது!

நன்றி காகமே!

கவிஞர் யாழி (எ) ம க, சிதம்பரம்

# தனிமையில் பெண்மை

நெடுக பாதையொன்றில்
நிறைந்த அடவியில்
நித்திரை பொழுதில்
கடலோர கரை சேர.



துணை என் மதியவனோடு
ஆழ்ந்து மூச்சில்
அவனியின் வாசம் நுகர
விழி மூடிய
ஒரு கணத்தில் நன்றியை
நானுரைக்க.
பாதச்சுவடில் ஆழியின் அலை
மறைந்தே

வஞ்சியின் அகத்தில் துளியும்
அச்சமின்றி மகிழ்ச்சியில்
துளிர்த்து சிலிர்த்து
நடனித்து அவனியும் அவளோடு

மெய்யாட பூரிப்பில் புன்னகையை
கூச்சலாய் நிறைந்த மனதோடு
சத்தமாய் சிரித்தே
விழித்தாள் காரிகை.

வாழ்ந்துவிட்டால் கனவிலே
விடியலில் குயில் கூவிட
ஸ்பரிசம் தென்றலுணர
நகைத்தே மறந்தாள் மீண்டும்
இந்த இறையும் பூமிதனை.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# மணிமேகலை [பதினைந்து]

14. பாத்திர மரபு கூறிய காதை

(அறவண அடிகள் மேலும் கூறுவார்)
1, அம்பலப் பீடிகையில் ஆபுத்திரன்
அன்று இரவு மழை, வழிப்போக்கர்கள் அம்பலத்தில் தங்கினர்
என்றும் இல்லாமல் நடுநிசியில் ஆபுத்திரனிடம் உணவு கேட்டனர்
இன்று பசி தீர்க்க பாத்திரத்தில் உணவு இல்லை வருந்தினான்
சென்று பிச்சை எடுத்தால் தானே பாத்திரத்தில் உணவு கிடைக்கும்.

இவர்கள் பசிபோக்க உணவு இல்லையே கவலையுற்று அழுதான்
"கவனமாக கேள் இதனைப் பெற்றுக்கொள் நாடு வறண்டாலும்
இவள் கொடுக்கும் இந்த ஓடு வறுமையுறாது பெற்றுக் கொள்"
அவன் கையில் கொடுத்தாள் வானில் இருந்து வந்த சிந்தாதேவி

சிந்தாதேவி, நந்தா விளக்கு வானோர் தலைவி வணங்கினான்
அந்த பாத்திரத்தினால் நடுஇரவில் அங்கு வந்தவர் பசி நீக்கினான்
அந்த நாள் முதல் அவன் பசித்தவர்க்கு புசிக்க உணவு தந்தான்
இந்த நாள் வரை மனிதன் விலங்கு பறவைகள போற்றி வாழ்த்தின

இந்திரன் கேள்விப்பட்டான் ஆபுத்திரன் பசிப்பிணி போக்குதல்
மந்திரம் போட்டதுபோல் கிழவன் உருவில் அவனிடம் வந்தான்
"உந்தன் அறச்செயல் உலகமே போற்றிப் புகழ் பாடுகிறது"
வந்திருப்பது இந்திரன், "என்ன வேண்டும் உனக்கு கேள்" என்றான்

கேட்டு பலமாக சிரித்தான்ஆபுத்திரன், "எனக்கு ஏதும் வேண்டாம்
நாட்டு மக்களின் பசிபோக்க உணவு தரும் பாத்திரம் உள்ளது
கோட்டை ஆளும் மன்னன் கடமை மக்களின் பசியை ஆற்றுதல்
உடுத்த உடை, இருக்க இடம், கொடுக்க உணவு போதுமே எனக்கு"

சினமுற்ற இந்திரன் தர்மத்தில் என்னையும் மிஞ்சிவிட்டான்
மனதின் முடிவு, "இரப்போர் இல்லாத நிலை கொண்டு வருவேன்
வனம் செழிக்க மழை பொழிய வயல்களில் நில்லா விவசாயம்
தனம் பெருக பசியால் அன்னம் கொள்வார் இல்லாத நாடானது"
மனம் வருந்திய ஆபுத்திரன் வறுமையற்ற உலகம் கண்டான்

எப்பொழுதும் பசித்தவர் புசித்து இளைப்பாறும் அம்பலம்
இப்பொழுது காமுகரும் பரத்தரும் தங்கும் இடமாயிற்று
குப்பை மேடான அம்பலத்தை விட்டு வெளியேறினான்
தப்பேதும் செய்யாதவன் தலை குனிந்து நடந்து சென்றான்

சில வணிகர்கள் வழியில் அவனை வணங்கிக் கூறினார்கள்
பலகாலம் மழையின்றி வறுமையில் வாடுது சாவகநாடு
நலம் பொருந்திய உன் அறச்செயல் அங்கு தேவைப் படுகிறது
மரக்கலம் சென்றுவிட்டதால் பாத்திரத்துடன் தனியே நின்றான்

என்னுயிர் காக்க மட்டும் இப்பாத்திரம் எனக்குத் தேவையில்லை
பின்னர் நீர் நிறைத்த கோமுகி பொய்கையில் போட்டு விட்டான்
"தன்னல மற்றவன் கை கிடைக்க ஆண்டுக்கு ஒருமுறை தோன்றுக"
அன்னமிட்ட ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் தன் உடலை விட்டான்



தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# புலம் பெயர்ந்த தமிழா!

வன்முறைக்கு அஞ்சி
வாட்டத்தோடு வெளியேறல்.

பிறந்த மண்ணைப்
பிரிய மனமின்றி

உயிருக்குப் பயந்து
உழைத்துப் பிழைக்க

புலம் பெயர்ந்து
நலம் இழக்க

உறவுகளின்றி
உயர்வுமின்றி

சொத்தை விடுத்து
சோகத்தோடு நடமாடல்.

வணிகத்திற்காக சிலர்
வளத்திற்காக சிலர்

உள்ளூரில் விரட்ட
உகுதலோடு வருந்த

அடைக்கலப் படுத்தும்
அண்டை நாடுகள்

வாழ்வாதாரம் தந்தே
வடிகாலும் ஆக

அந்நாட்டில் தன்னினம்
அமைதியாய் வாழ்ந்திட

ஒற்றுமையோடு நாளும்
ஒருங்கே கூடுவர்

தாய்மொழி மறவாமல்
தாலாட்டி மகிழ்வர்.

கடல் வாணிகத்தில்
களிப்புடன் உச்சத்தில்

அன்று இருந்தவன்
இன்றும் இருக்கிறான்

வரலாறாய் மாறி
வித்தகராய் நிலைப்பு.

உழைப்பால் உயர்வு
உச்சம் தொடல்.

பிழைக்கப் போனாலும்
புரட்டின்றி வாழ்க்கை.

நேர்மையாய் வாழ்வதால்
நிம்மதியாய் இருத்தல்.

ஆழ்மனதில் தாய்நாட்டின்
ஆனந்த நினைவுகள்.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

என் கைகளை
இறுகப் பற்றிக் கொள்
என்னைத் தொலைத்தது போல்
உன்னையும் தொலைத்து
விடப் போகிறேன்.
*

காதல் தீ மூட்டி விழிகளால்
என்னைச் சமைக்கிறாய்.
குழையாமல் பக்குவமாய்
வெந்து முடித்திருக்கிறேன்.
சூடாறும் முன்பு ருசியோடு
என்னைப் பரிமாறிக் கொள்.
*

வானத்தை கூடாக்கிய
மேகங்கள்; மழையான நாளில்
தன் தேடலை இனிதே
தொடங்குகிறது பூமியில்.
*

காலத்தின் பிடி
ஒருவருக்கும் தேவைப்படாமல்
போகலாம்; எனினும்
ஒருவரையும் மிச்சம் வைக்காமல்
அனைவரையும்
தன் பிடிக்குள் வைத்திருக்கிறது
காலம்.
*

இன்பத்திலும் துன்பத்திலும்
அழ மட்டுமே செய்கிறது
மழை.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கோடமழக் கொட்டுதடி

வெயிலும் குறையுதடி
வெப்பமும் மறையுதடி
குளிர்காத்து வீசுதடி
கும்மாளம் பிறக்குதடி

மேகமும் கருக்குதடி
வானமும் கம்முதடி
மின்னலும் வெட்டுதடி
இடியும் இடிக்குதடி

கோடமழக் கொட்டுதடி
மனசெல்லாம் நிறையுதடி
ஓடையெல்லாம் சலசலக்குது
நெஞ்சமும் மகிழ்வாகுது

மழை நீரும் ஓடுதடி
குட்டையெல்லாம் நிறம்புதடி
கழனியெல்லாம் நனையுதடி
உழவனும் மகிழ்கிறானே
உழவும் நடக்குதடி
உள்ளமும் சந்தோசமாகுதடி

வரப்பு போட்டுதான்
பாத்தியும் கட்டியாச்சு
விதையெல்லாம் ஊன்றியாச்சு
வாய்க்காலும் வசதியாச்சு



விவசாயம் செழிக்கட்டுமே
மகசூலும் பெருகட்டுமே
மக்கட்பசித் தீரட்டுமே
விவசாயியை வாழ்த்துவோமே

தண்ணீர்ப் பஞ்சம்
தரணியில் தீரட்டுமே
புல்பூண்டும் முளைக்கட்டுமே
பசுமையும் செழிக்கட்டுமே

பச்சைப்பசேல் கண்ணுக்கு
விருந்து படைக்கட்டுமே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உழவனின் உழைப்பின்றி உயர்வேது

உழவனின் உழைப்பின்றி
உலகில் உயர்வேது?
உண்ண உணவை
உற்பத்தியாக்கும் ஆளேது?

உண்ணும் வேளை
உதிரும் சோறு
உள்ளத்தில் நினைத்தால்
வீணடிப்போமோ இனிமேலே?



வயலில் விவசாயி
கால் வைத்தால்
வயிறு நிறைய
களஞ்சியங்கள் பொங்கும்.

வானின் மழையை
வாழ்வாதாரமாக்கியே மண்ணில்
வாழவைக்கும் ஆதாரத்தில்
வாழ்கின்றான் உழவனே.

இயற்கையோடு இணைந்து
இல்லத்தின் தேவைகளை
பூர்த்தி செய்யும்
பூவுலகோரை வணங்கணுமே.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# ஐம்பெரும் பூதத்து இயற்கை

இறைவன் படைப்பில் ஒவ்வொன்றும் அழகு
இயற்கையும் இரசிப்பதில் மிகுந்த அழகு
உலகம் ஐம்பெரும் பூதத்தாலும் அழகு
எல்லாமே நம்மை அழகாக்குவதும் அழகு
குழந்தைகளுக்கு மரக்கன்றினை வழங்குவதும் அழகு
வளர்ந்து பார்த்து மகிழ்வூட்டுவதும் அழகு
பூமியில் வாழ்வது நமக்கு அழகு
சுவாசிக்க தூய்மையான காற்றும் அழகு
பச்சை பசேல் வயலும் அழகு
நீரோடையில் நீர் சலசலப்பதும் அழகு
வானமும் அழகு பூமியும் அழகு
வாசம் நிறைந்த கிராமமும் அழகு
மனிதன் மட்டுமே அழித்துச் செல்கிறான்
நிலங்கள் எல்லாம் கட்டடம் ஆகுகிறது
மழை பெய்தால் தண்ணீர் வடிய
இடமில்லாமல் போகும் போது ஏன்
இந்த சோதனை மானுடா பாதுகாப்போம்
அடுத்த தலைமுறைச் சொந்தங்களை எல்லோரும்




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

புன்னகையோடு வாழும்
இவளின் மறுபக்கம் தெரியுமா?
திமிரோடு வாழும் இவளின்
தனிமையான பக்கம் தெரியுமா?
கடுமையான சொற்கள் வீசும் இவரின்
கசப்பான வாழ்க்கை தெரியுமா?

எத்தனை இரவுகள்
கண்ணீரோடு கடந்திருக்கிறாள்
எத்தனை பகல்கள் தனிமைக்கு
பரிசாக கொடுத்திருக்கிறாள்

மீண்டும் விட முடியாமல் கொடிய நினைவுகள்
சிக்கித் தவித்து இருக்கிறாள்
பாரத்தை இறக்கி வைக்க முடியாமல்
விரக்தியில் மரணம் வரை சென்று இருக்கிறாள்

பாசம் என்ற வலையில் சிக்கியதால்
வேஷம் கலைந்து திரிந்து இருக்கிறாள்
இவளின் இறந்த காலம் மறைக்கப்பட்ட ஒரு மறுபக்கம்

எல்லாம் மறந்து எல்லாம் வெறுத்து
திமிரை அடையாளமாய் கொண்டு
தைரியத்தை தன்னுடையது என்று
புது வாழ்க்கை வாழும் இவளுக்குள்
மரணிக்கப்பட்ட மறுபக்கம் உண்டு.



கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# நிதியின்றி நிம்மதியேது?

பொருளைத் தேடியே அலைந்திடும் வாழ்விதே
இருளை விலக்கியே அலுத்திடும் ஆயுளுமே
வேகத்திற்கு தடையென பல்லாயிரம் இடர்களே
போகும் பயணத்தின் வழிகளில் இன்னல்களே

உழைத்தே தேய்ந்திடும் உடலின் உறுப்புகளுமே
உருகியே அழுதிடும் உள்ளமும் உயிருமே
கருவறை முதலே துவங்கிடும் போராட்டமே
கல்லறை வரையிலும் விடாதுத் துரத்துமே



இன்னுமா இல்லையென ஒவ்வொரு பருவத்திலுமே
இல்லாமையைப் பழித்தே உலகம் செல்லுமே
நிதியில்லா வாழ்விதிலே நிம்மதியே இல்லையே
மதியிருப்போர் அறமின்றி வாழ்வதும் இல்லையே

நாடிடும் யாவிலும் பணத்தாளே விளையாடுதே
தேடியே தவித்திடும் உயிர்களோ அழிகிறதே
அத்யாவசியத் தேவைக்கும் ஆதாரமாய் செல்வமே
ஆடம்பரத்தில் ஆசைப்படின் அழிவினையே கூட்டுமே

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# உடைந்த தேசம்

வானில் இருந்து இறங்கும்
குண்டு மழை!
பற்றியெறியும் நகரங்கள்
பதுங்கு குழியில் பயந்து
ஒதுங்கும் மனித உயிர்கள்!
மண் மீது கொண்ட பேராசை
நான் பெரியவனா? அல்லது நீயா?
என்ற தலைக்கனம்!
கை காலை பறிகொடுத்து
உற்றார் உறவினரை இழந்து
பரிதவித்து தெருவில்
உணவுக்காக கையேந்தும்
சிறுப்பிள்ளைகள்!
பார்த்தவர் நெஞ்சம் பதறிட
உடைந்தது அங்கே தேசம் மட்டுமல்ல!
மனிதர்களின் தன்னம்பிக்கையும்
தைரியமும் காணாமல் போக
மனிதத்தை இழந்து விட்டோம்!
யுத்த பூமியில் நியாயத்திற்கும்
நேசத்திற்கும் இடமில்லை!
என்று மீண்டும் மீண்டும்
இரக்கமற்று நிரூபிக்கிறோம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# உன் வரவால்

உறங்கிக் கொண்டிருந்த
என் தமிழ்க் கதவு உன் வரவால்
தாழ்ப்பாளை மீறி மீண்டும்
தானாய்த் திறந்து கொண்டது.

என் வரிகள் யாவும்  வேர் விட்டு
எதுகையும் மோனையுமாய்
பின்னிப்பிணைந்து கொண்டன

கால நேரம் பாராது
கிளை விரித்துப் பூஞ்சோலையானது.

ஆழ்மனதில் இருந்து மெதுவாய்
அடிகளும் சீர்களும்
புதுப்புது அவதாரங்களில்
பூமாலைக் கோர்வைகளானது.

அழகுத் தமிழின் தீராத நேசம்
உன் பாசத்தால் தானே தினம் தினம்
வாசம் வீசி வாசல் திறந்து கொண்டது.



கொச்சைத்தமிழும் அழகுதான்
கோபத்தின் உச்சிக்கே போனாலும்
உச்சரிப்பில் உணர்ச்சிகளிலும்
உன் தமிழும் என்னில் செந்தமிழ்தானே

மூச்சிலும் முனகலிலும்
ஏச்சிலும் பேச்சிலும் உன் மொழிகளால்
என் விழிகள் நனைந்த போதெல்லாம்
விழி நீர் உறிஞ்சிக் கிளை விடுகின்றன
என் புதுக்கவிதைகள்.

இலை உதிர்ந்து செத்துக் கருகி
மீண்டும் மீண்டும் மொட்டவிழ்க்கின்றன
சேற்று நீர் செந்தாமரைகளாய் இவள்
செந்தமிழ் மோகம் உன் வரவால்.

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# நம் நாடு

கலாச்சாரம் பலவுண்டு
சமய கோட்பாடு பல கொண்டு
அன்றும் இன்றும் என்றும் புகழ் கொண்டு
.
ஆன்றோர் பலருண்டு சான்றோர் பலர் கொண்டு
விளங்க பல காரணமுண்டு.
ஆதிகால முதலே ஆன்மீகம் தழைத்தது நம்நாடு .

ஆதிசங்கரர் காலத்து முன்பிருந்தே
63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும்
இறைவனுக்கும் அடியார்களுக்கும்
ஆற்றிய தொண்டு பெரும் பங்கு

கங்கை, சரஸ்வதி, யமுனா, காவிரி, கிருஷ்ணா
புண்ணிய நதிகள் பல உண்டாம்
மொழிகள் பலபேசும் மக்களுமே பலஉண்டாம்
எல்லாம் வளமும் கொண்ட நாடு
இந்தியா என்பது என் தாய் நாடு



பூஜ்ஜியம் தந்தது நம் நாடு
புத்த சமயம் தந்தது நம் நாடு
ஜனத்தொகை அதிகம் கொண்ட நாடு

சேர, சோழ, பாண்டியரும்
நீதி வழுவாது நெறி முறையில்
நல்ல ஆட்சி தனை செய்து
மங்கா மாறா புகழோடும்
கட்டிய கோவில்கள் பலவுண்டாம்

நற்பெயர் கொண்ட நம்நாடும்
விரைவில் வல்லரசு நாடாகும்.

கவிஞர் அ. கிருஷ்ணவேணி ஊத்தங்கரை

# நான் யார்?

நான் யாரென்றே கேள்விகள் என்னை துளைக்கிறது
தூக்கங்கள் மறுக்கிறது சிந்தை அலசுகிறது
பேசுகிறேன் இறைவனிடம் நான் யார்? எனது பாதை எது?
நான் என்ன செய்ய வேண்டும் ?

சிந்தைக்குள் விந்தையே நிகழ்கிறது
எனதெழுத்தில் ஓர் மாற்றம்
எனது எழுத்தில் ஓர் கவர்ச்சி
எனதெழுத்தில் ஆழம்
எனதெழுத்தில் சொல் முயற்சி



தேடுகிறேன் சிந்தையில்
ஏராள தாராளமாக ஏகே போக
நூல்களின் தரிசனம் வேண்டும்

எனதெழுத்தில் ஓர் எழுத்தேனும் யாரோருவரிடம்
வரவேற்கதாகி போகட்டுமே.
நான் இப்படியே வேரடித்த மரம் போல
ஒரெடுத்திலே நிற்க விரும்பவில்லை

ஊசி முனையில் நுழையும் நூலைப்போல
எனக்குள் மாற்றம் தரும் நூல்களை தேடுகிறேன்

தேடுகிறேன் நான் யாரென்று
கற்கிறேன் எழுத்தின் வடிவங்களை
கல்லை சிலையாக்கிய சிற்பியைப்போல
எம்மை தேறிட வழிக்காட்டும் ஆசான்கள் இல்லை

நான் இறைவனை கேட்கிறேன் வழி வேண்டும்
நான் யார் எனக்கான தேடல் எனக்கான களம் எது?
வீழ்ச்சியை தள்ளி விட்டு முயற்சியில் இறங்குகிறேன்
நான் யார் நாளைதனில்.

ஓடும் நதியில் பயணமாகும் ஆமையைப்போல
செல்லும் தூரத்தை கனிக்க தெரியாமலே
திசைக்காக காத்திருக்கிறேன்
எழுச்சியை நோக்கி நகர வேண்டும்
தளர்ச்சி இன்றி நடந்தேறி சிகரம் தொட வேண்டும்

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், இலங்கை

# புடவை குடை

கருப்பு குடையில்லை
எனினும் வறுமையில்
வாடவிடாத
பாச குடை
அன்னையின்
புடவை குடை



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

தீங்கிழைக்கும் தேரொட்டி நாயகன்
பொல்லாங்கு செய்திடும் அணங்கு
களவாட துடிக்கும் உமை வாசகம்
நன்றி மறந்தவர் பாழ்பட்டுப் போக
கோவும் கோழியும் காவல்.
வன்சொல் விதைக்க இன்னல் அறுவடை
அறம் எழ தீமை வீழும்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# பசி

ஒவ்வொருவரையும் விடாமல்
துரத்திக் கொண்டே இருக்கிறது
பசி.

பசியை எதிர் கொள்பவர்கள்
அவமானத்தை எதிர்கொள்கிறார்கள்.
பொய் உரைப்பவர்களாக மாறுகிறார்கள்
உணவு கிடைக்காத போது
எச்சிலைக் கூட்டி
ஏக்கத்துடன் விழுங்குகிறார்கள்.
பசி உச்சம் தொட்டு நிற்கையில்
வாந்தியெடுத்து நிற்கிறார்கள்.



வயிறு பசியை
எதிர் கொண்டிருந்தாலும்,
மூளை பட்டினி கிடப்பதில்லை.

பசி அடங்க
எதையெதையோ விபரீதமாய்
யோசிக்க வைத்துக் கொண்டே
இருக்கிறது.

பசியை அடங்க
கை விரல்களைத் தின்றிடவும்
கிறுக்குத்தனமாக எத்தனிக்கிறது.

ஒவ்வொருமுறையும்
மனிதர்களது தீராப்பசி
பித்தேறச் செய்கிறது.

பசியின் நெருக்கடி
பேரழுத்தமாய் எதிர்ப்படும் போது
மனம் சமரசம் செய்து கொள்வதே இல்லை.

வாழ்க்கை
யாருக்கும் எதையும்
எளிதாக தந்துவிடுவதில்லை
இருந்தாலும்,
வயிற்றுக்கும், மனதுக்கும்
போராட்டம் நிகழ்கையில்,
ஒவ்வொரு முறையும்
வயிறையே வெற்றி பெறச் செய்கிறது
பசி

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# நிச்சயதார்த்தமே!



நித்திலத்திலே இணைந்து
நினைவுகளிலே கலந்து
நிறைவாக வாழ்வதோடு

நிகரான துணையுடன்
நிதர்சனமாய் இருக்கவே
நிறைய பேர் வாழ்த்திட

நிதானம் கடைபிடித்து
நிம்மதியாக இருந்திடவே
நியாயமும் பின்பற்றி

நிரூபணமாகவே ஒருவருக்கொருவர்
நிவாரணியாக இருந்திட
நிசியிலும் நிழலாகவே

நிலையான வாழ்வில்
நிலைத்து நின்றிட
நிச்சயதார்த்தமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# பயணம்



காலம் வகுத்த தீசையில்
இலக்கை நிர்ணயித்தது பயணம்.
நெருங்கியும் செல்கையில்,
இலக்கின் எல்லைக்கல்லை
முன் நகர்த்தி
உத்வேகத்துடன் மீண்டும் தொடர.
சாலையில் முட்கள் உண்டு
இளைப்பாற வேப்ப மரமும் உண்டு
இயற்கை உணர்வும் உண்டு
அத்தனையும் ரசித்தபடி
அத்தனையும் ஏற்றபடி
உற்சாகமாக பயணம்தான்
வாழ்க்கை.

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# என் கனவு தேசம்

என் கனவு தேசம்
ஏழைகள் இல்லா தேசம்
உழைப்பாளிகளே வாசம்
சாதி மத பேதங்கள் இல்லா நேசம்

வெட்டிப் பேச்சுகள் இல்லை
வீணர்கள் இல்லை
தட்டிக்கேட்போர் இல்லை
தவறிழைப்போர் யாருமில்லை

அடிமைகள் இல்லை
அதிகாரப் பாய்ச்சல் இல்லை
பொய்யுரைப்போர் இல்லை
புனிதன் என்றுரைப்போர் யாருமில்லை.

கடன் கொடுப்போர் இல்லை,
வாங்குவோர் இல்லை
கவலைகள் ஏதுமில்லை
கையிருப்பை பறிக்கும் நெறிகள் ஏதுமில்லை

கன்னியர் உண்டு,காதலும் உண்டு
களிப்பில் திணறிடும் குடும்பங்கள் உண்டு

படிப்போர் உண்டு,படைப்போர் உண்டு
கொடுப்போர் இல்லை,பெறுவோர் இல்லை
வேண்டுதல் இல்லை,வரங்கள் இல்லை
கோவில்கள் இல்லை,குறையும் இல்லை

வானத்துத் தெய்வங்கள் வந்தே இறங்கி
வாழ நினைக்க விரும்பிடும்போது
சொர்க்கமாய்ப் பூமி மாறிடும்போது
வேதனை ஏது? விருப்பங்கள் ஏது?

கனவில் தோன்றிய கருணை தேசம்
நினைவில் நிற்கும் போது
கவலைகள் ஏது?காட்சிகள் ஏது?
கனவு தேசம், இப்புவிமீது



கவிஞர் திருமதி. இரா. இராஜாமணி, ஈரோடு

# தொலைந்து போதல்

அவ்வளவு ஒன்றும் எளிதானதாக இல்லை
பல்லாண்டுகளாக பலவிதமான முகமூடிகளை சுமந்து
பார்த்துப் பார்த்து சேகரித்து வைத்த
அடையாளங்களை தொலைப்பதென்பது.
இயலாமையே பெருஞ்சுமையான பொழுதொன்றில்
சீவித்திருத்தலை மீறி எங்கனம் வெளிப்படும்
ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் இயல்பென
பூசிக்கொண்ட அடையாள தருணங்கள்.
புரிதல் உடைந்து
வறண்டு போன கண்ணீரை விட
எளிதானதாக இல்லை
அடையாளங்களை தொலைப்பதென்பது.



கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# நான்

தனிமையில் தடுமாறும் காலடி தடங்களின்
அடையாளமாய் நான்.

ஆயிரங்கள் இருந்தாலும் நான் மட்டும்
தனிமையின் தலை எழுத்துக்களாய்.

உறவுகளின் கூட்டத்தில் அநாதை என்னும்
அடையாள அட்டை என் கழுத்தில்.

வார்த்தைகளின் குரல்வளையில் நான்
என்றும் ஊமையின் குரலாய்.

வறுமையின் வாய்க்கரிசி எனக்கு தினந்தோறும்
காலை உணவாய்.



எனக்காக நான் மட்டுமே என்ற
நம்பிக்கையின் பாதையில்

நாட்களை தின்று கண்ணீரில்
கரையும் சுமையாய் நான்.

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

விழிகளின் நீர் கசிவுக்கு
'கண்ணீர்' என
பெயர் சூட்டியவன்
எவனோ?



கவிஞர் ஈ. தவணிதன், பல்லடம்

# பாலஸ்தீன தாயின் தேடல்



மயிரிழையில் உயிர்பிழைத்த ஓர்தாய்
கால்படரிபட ஓடியோடி தேடியலைந்தாள்

தேடுதேடு ஓடுஓடு என்ற எண்ணத்தோடு
இஸ்ரேலியரின் ஏவுகனைகளையும் தாண்டி
துப்பாக்கிக்களின் வெடிசத்தம்

காதோடு மரண எண்ணிக்கைகளையெண்ண
அவள் தேடுகிறாள் அவள் தொப்புள் கொடி உறவொன்றை
உயிரோடு இருந்தால் போராடென்று சொல்ல

உயிர் இழுத்துக்கொண்டிருந்தால் கலிமா ஷஹாதா சொல்ல
இறந்துவிட்டிருந்தால் ஷஹீத் எனும் நிம்மதி பெருமூச்சுவிட

தேடிக்கிடைக்கவில்லை இருந்த அனைத்தும் குருதிப்பூக்களாய்
எல்லா முகங்களும் தன் மகனின் முகங்களாகவே இருந்தன.

கவிஞர் ஷியாஸ்னா பைஸல், இலங்கை

# அழுக்கு இழுக்கு

ஆதியிலே வந்த அழுக்கு
பாதியிலே வந்த அழுக்கு
அஞ்சுபேரு சேர்த்த அழுக்கு
அழுக்குல மூழ்கிப் போனேன்
மீட்டெடுக்க யாருண்டு?



அழுக்கால வந்த இழுக்கு
அதை போக்க வழியென்ன
இழுக்கால பட்டப்பாடு
சொல்லி மாளமுடியாது
மீட்டெடுக்க யாருண்டு?

எட்டடுக்குள்ள தேடிப் பார்த்தேன்
தட்டுதடுமாறி போனேன்
அகவொளி ஏற்றிப்பாரு
அகத்தீசன் சொன்னாரு
மீட்டெடுப்பார் அங்குண்டு

மூலப்புற்றை சீண்டிடவே
உறங்கியது ஊர்ந்தது
உச்சியிலே சுழன்றது
அகவொளி உதித்தது
அழுக்கது அகன்றது

அழுக்கது அகன்றிட
இழுக்கது மறைந்தது
உடலது மிளிர்ந்தது
சுகமது பிறந்தது

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# சுடுகாடு

ஆளில்லா அடர்ந்த காடு
ஆந்தையின் அலறல்!
ஆன்மாவின் உறக்கம்
ஆண்டவனின் சித்தம்!
கர்மாவின் கதகளி ஆட்டம்
பீதியில் பிதுங்கும் விழிகள்
போட்ட ஆட்டம் கண்ணெதிரில்
நிச்சலனமாய் அடங்கும் உயிர்!
அமைதி கொள்ளடா மானிடனே!
அரவணைக்கும் சுடுகாடு.



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# அனாதியாய்

வந்தார்கள்
வந்த வேலை முடிந்ததும்.
சென்றார்கள்
அனாதியாய்.
மிக்சர் துகள்கள்,
ஊறுகாய் பாக்கெட்டுகள்
தண்ணீர் பாட்டில்கள்
தண்ணீர் டம்ளர்கள்
சாராயப் பாட்டில்கள்
ஆம்லெட் பாரோட்டா குருமா என
சிதறி கிடைக்கின்றன
நடுத்தெருவில்!



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# பயணம்

எண்ணமும் என்னோடு
சேர்ந்து பயணிக்கும்
எப்போதும் என் பயணத்தில்.

வார்த்தைகள் ஏனோ
மௌன விரதம் கொள்ள

சிந்தனைகள் புறக்களாய்
வெளிச்சுற்றிதான் பறக்கும்.

பயணம் மட்டும் முன்னே செல்ல
நினைவுகள் ஏனோ
பின்னே செல்லும்

தோற்றுப்போன காலங்கள்
நினைவால் மடிந்த நிகழ்வுகள்

உறவுகளின் நிந்தனைகள்
அத்தனையும்

பெட்டகம் திறந்து
எண்ணத்தில் செக்காகும்

பயணம் முழுதும்
பல நினைவுகள்

மூட்டை முடிச்சோடு
நசுங்கி அழுத்தும்



திரிந்த நினைவுகள்
பிளந்த ரணங்கள்

அத்தனையும் மறைந்துபோகும்
இறங்கும் இடம் வந்தவுடன்

எல்லோரும் போனபின்
அமைதியாய்
இருக்கையும் மனமும்

*கவிஞர் மு. சரவணன், சித்தர்காடு, மயிலாடுதுறை*

# இச்சையுள்ள மச்சானுக்கு என்துயரச் சொல்லிருங்கோ



மச்சான் நெனப்புலதான்
மாசக்கணக்கா காத்திருக்கேன்
வச்ச அன்பால
வழிநெடுகப் பூத்திருக்கேன்

கண்ணு ரெண்டும்
காணாமக் கலங்கிருக்கு
வண்ணமா நாமதிரிஞ்சத
வடிவா நெனச்சிருக்கு

தெவிட்டாத காதலும்
தேகத்தில தவிச்சிருக்கு
அன்பால சேர்ந்தகதை
அத்தனையும் இனிச்சிருக்கு

நெஞ்சுக்குள்ள நெறச்சிவச்ச
நெருக்கமான உசுருகூட
சுனாமியாட்டம் என்னை
சூறையாடுது எப்பவுமே

நீரவிட்டுக் கெடக்கிறமீனா
நித்தமும் துடிக்கிறனே
வேரவிட்ட மண்ணாத்தான்
வெறுமையில இருக்கிறனே

தூரமா நாயிருந்து
தூதுவிடும் பாசமுந்தான்
பாரமான ஒம்மனசப்
பக்குவமா ஆக்கிடுமே

வழியோரம் காத்துக்கிட்டு
ஒன்டியா நிக்கிறனே
வலியோட என்னவனத்
தெனந்தோறும் தேடுறனே

பக்கத்துல நீயிருந்தா
சொர்க்கத்துல நாயிருப்பேன்
வெக்கத்த விட்டுத்தான்
வேதனையச் சொல்லுறனே

பச்சக்கிளிக் கூட்டங்களே
எம்பாவம் பாருங்களேன்
இச்சையுள்ள மச்சானுக்கு
என்துயரச் சொல்லுங்களேன்

*கவிஞர் கிருஷ் அபி*

# மண்ணுலகம் உயிர்த்திடும்

புலரும் காலைப் பொழுதின் இன்பம்
மலரும் பூக்களில் மகிழ்ந்திடும் முறுவல்



குளிர்ந்த காற்றும் கூதலைக் கூட்டிடும்
களிப்பில் குருவிகள் கானம் இசைத்திடும்

மலையின் இருளும் மடிந்து ஓடிடும்
அலைகளின் வேகம் அழகைப் பொழிந்திடும்

புல்லின் நுனியில் பனிக்குடம் உடைந்திடும்
சில்லிடும் சூழலில் சுகமோ விரிந்திடும்

விடியல் வானில் வெளிச்சம் பரவிடும்
விடிவெள்ளி கண்சிமிட்டி விடைபெற்றுச் சென்றிடும்

இலைகள் களிப்பில் ஆடி அசைந்திடும்
தொலைவில் அருவியும் தேனிசை தந்திடும்

செந்நிறச் சூரியன் சோதியில் மிளிர்ந்திடும்
மந்திர ஒளியிலே மண்ணுலகம் உயிர்த்திடும்

எந்திர உலகம் இயக்கம் பெற்றிடும்
சந்திரன் மௌனமாய் சஞ்சாரம் செய்திடும்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தனிமையிலே காத்திருக்கிறேன்

உறவுகள் பல இருந்தும்
நீ என்னருகில் இல்லாததால்
தனிமையை மட்டுமே உணர்கிறேன்
காதலுடன் காத்திரு
கண்டிப்பாக வருவேன் என்றாய்
தனிமையிலிருந்து
எனை மீட்டெடுக்க
தலைவன் நீ வருவாய் என்று
அளவிலாக் காதலுடன்
தனிமையிலே காத்திருக்கிறேன்



கவிஞர் தீ. டனேஸ்ரீ, மட்டக்களப்பு (இலங்கை)

# சுற்றும் பம்பரமாய்

சுற்றும் பம்பரமாய்
சுறுசுறுப்பை கூட்டு

சற்றும் சோர்ந்திராமல்
சாதித்து காட்டு

கற்கும் வயதினிலே
கற்றிடு தம்பி

கச்சிதமாய் நற்குணத்தை
பெற்றிடு தம்பி

நாளை பலனளிக்கும்
நாற்றங்கால் நீயே

நாடே போற்றுகின்ற
நற்பெயர் பெறுவாயே

காலை எழுந்திடு
கதிருக்கு முன்னே

நாளை செதுக்கிடு
உனக்காக கண்ணே




விளையாட்டே ஆரோக்கியம்
விலையில்லா சொத்து

வீரனாய் நடைபோட
அதுவன்றோ வித்து

கவிஞர் அ. தனசேகரன், அருளவாடி (விழுப்புரம் மாவட்டம்)

# புதுவித மோகனம்

அமைதி இருளில்
ஆழ்ந்த மயக்கம்தான்
உலர்த்தும் விழிகள்
புரியும் அபிநயம்
உணர்ந்த காற்றும்

மனம் இனித்துக்கிடக்குது
குழலை சுற்றிய பிச்சிப் பூவின்
துணையில்

அவளோடு உறவாடும்
பூவின் இதழ்களில்
குறுஞ்சிரிப்பு நளினம்

இதிலென்ன ரகசியம்
இளமையின் வழித்துணை
வாராதோ கைசேராதோ

புதுவித மோகனம்
குழைந்திடும் தாகமும்
தீராதோ தாகம் தீராதோ

வனத்திலே வளரும் துளிரிலே
கண்ணயர்ந்த கணத்திலே
பூவாசம் முகம் துடைத்து
தழுவும் வேளையில்



தோள் தொட்ட கரம்
இருள் கவிதை வாசிப்பில்
ரீங்கார வண்டினங்கள்
தனிமையிருளை நேசித்து
மௌனம் ருசித்தது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகை மாவட்டம்)

# ஈர சுரிகுழல் நல்லாள்

வெஞ்சின வேழ முகம்
உறங்காப் பொழுதுகள்
வழியோடு தொலைத்த திவள்
இசைமீட்டும் பொழுதினில்

பிச்சிப் பூ சிகையணைக்கும்
பிஞ்சிமன வாசத்தில்



நித்தம் புலரும் ஞாயிறும்
நித்தம் மலரும் முல்லையும்
விடியாப் பொழுதின்
விதிமாற்றியதொரு நாள்

குன்றாத விடியலில்
குவளை தாங்கியது
தன்கை அனலிடாத குளம்பி

விரும்பிய போழ்துகள்
விரும்பா மொழி தவிர்த்து
கண்மறைந் திசைத்த
குயிலின் குரல்தன்னில்

இமை மறந்து ரசித்தனள்
ஈரச் சுரிகுழல் நல்லாள்

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# என் அண்ணன்

நீ இருந்த அறையில் நான் இல்லை
நீ இருக்கும் இடத்தில் நான் இல்லை

நீ சண்டையிட நினைத்தாலும் நான் உன் அருகில் இல்லை
நீ ஊட்டி விரு நினைத்தாலும் நான் உன் அருகில் இல்லை

நீ என்ற உன் இதயத்துக்குள்
உன் தங்கை ஆகிய நான் அடங்கி இருக்கின்றேன்

தொலைவில் இருப்பதாலோ இந்த குறுஞ்செய்தி
உன் பிடிவாத தங்கையாகிய நான்



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

# வாழ்க்கை என்றும் வசந்தமே

வாழ்வு என்னும் போராட்டத்தில்
வாழ்க்கை என்பது வானவில்லே!

அன்பான உறவுகளும் உயிரான தோழர்களும்
உடன் இருக்கும் காலம் வரை
வாழ்க்கை என்பது வசந்தமே!

அன்பான இதயத்தோடு பழகும் நட்பும் உறவு கூட
பாசம் விட்டு போவதில்லை!

பாசம் விதைத்து பண்போடு பழகு மனிதன் தோற்பதில்லை
அன்பு விட்டு போகும் எனில் வாழும் வாழ்க்கை நரகமே!

உயர்ந்த வாழ்வின் நிலையில் கூட
எளிமை மாறா மனிதனுக்கு ஏற்றம் என்பது உண்மையை!

புறம் பேசும் மனிதர்களையும் உதட்டில் நஞ்சு கொண்டு
போலியாய் வலம் வரும் 'பதரான' மனிதர்களை
பக்குவமாய் களைந்து விட்டால்



வாழ்க்கை என்பது வசந்தமே வாழும் வரை
உண்மையே நட்பு என்பது புனிதமே
நாளெல்லாம் இனிமையே

நட்பு வேறு உறவு வேறு பிரிக்காத மனம் வேண்டும்
கண்கள் இரண்டு என்றாலும் காட்சி ஒன்று வேறு இல்லை

நட்பும் உறவும் கண்களை போல் நலம் போற்றும் ஒரு செயலே!

*கவிஞர் ஜேபி @பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு*

இடம் மாறும் சூழலிலும்
தடம் மாறும் நிலை தவிர்
இருப்பிடத்திற்கேற்ப
வாழும் முறையை மாற்றிக்கொள்
வாழ்வியல் பண்புகளை
மாற்றிக் கொள்ளாதே.
******

எடுத்துக்கொண்ட செயல்
முடியும் வரை மனதோடு
சமாதானம் ஆகிவிடாதே;
சமாதானமாகிவிட்டால்
செயல்களில் தடைகளும்
தடுமாற்றமுமே மிஞ்சும்.
*******

உன்னை நோக்கி வரும்
விமர்சனங்களை எதிர்கொள்
அது உன்னை பலப்படுத்தி
குறை களைந்து பக்குவப்படுத்தும்.
******

அணுகுமுறையில் உன் அன்பை கலந்து விடு,
அது அனைவரையும்
உன்னைச் சுற்றியே இருக்க வைக்கும்.!
****


மனம் திடம் கொள்;
இழப்பை ஏற்றுப் பழகு;
இழந்ததை இரு மடங்காக
திருப்பிக் கொடுக்கும்.!
*******

ஒருவருக்கு நாம் கொடுக்கும் *ஊக்கம்*
அவர் வெற்றியில் பாதியை
பதிவு செய்யும்.!
******

மருந்தாய் கசக்கும் உண்மையை
உட்கொள்ளும் (உணரும்)போது
பிணி (தேவையற்ற எண்ணங்கள்)
வெளிநடப்புச் செய்யும்.!
*******

அதிகப்படியாக திணிக்கப்படும்
அன்பும் திகட்டச் செய்துவிடும்.
அளவறிந்து அன்பைப் பகிர்.!
******

உனைச் சுற்றியுள்ள தடைகளை
உடைத்தெரிக்கும் உளி
உன் சுய நம்பிக்கை.!



கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# விதைக்கா காடுகள்

ஒரு
மழைக்காலத்தில்

முன்னோர்கள்
விளையாட்டாக
சொல்லிவிட்டு
சென்றிருக்கலாம்

வெட்டும் குழியில்
விதைத்தால்தான்
விறகுகள்
எரியுமென்று



கண்மூடிய
வழக்கங்களில்
காணாமல் போன
சந்ததிகள்

மழையில்
விதைத்து
வெயிலில்
எரித்திருக்கும்

எதை எதையோ
வளர்த்த சடங்குகள்
கட்டுகள் அவிழ்க்காமல்
காடுகள் வளர்த்திருக்கும்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தூரத்து வெளிச்சம்



இருள்வது முடிவல்ல- அது
வெளிச்சத்தை நோக்கி
பயணிக்கிறது.

தடைகள் காணாமல்
தரணியில் எவர் உண்டு?!
நடைகள் பயிலாத
கால்கள் எங்குண்டு?!

மடிவதும் முடிவல்ல - அது
இமயமாய் உயர்ந்து நிற்கிறது

முடங்கி கிடந்தால்
அது மடத்தனம்!
முயன்று நின்றால்
அது வெறித்தனம்!

கலங்கரை விளக்கம் தரும்
தூரத்து வெளிச்சமாய்தான்
வெற்றி .
காத்துக்கொண்டு இருக்கும்!

புற்கள் மீது
அமைக்கப்படுவது அல்ல
வெற்றியின் பாதை !
அது எப்பொழுதும்
முட்களின் மீதே
அமைக்கப்பட்டு இருக்கும்!

முட்களின் நடுவில்தான்
ரோஜாக்களே மலரும்!

தும்பிகள் பறப்பதற்கு
சிறு வெளிச்சமே
போதுமானதாக இருக்கிறது

அன்பு தம்பிகளே
புறப்படுங்கள்.
நமக்கு கதிரவனே
காத்துக்கொண்டிருக்கிறான்!

ஆம்
கதிரவன் கூட
தூரத்து வெளிச்சம் தான்.

கவிஞர் சி முத்தரசன், அரியலூரர்

# மனிதரைத் தேடுகிறேன்

இருட்டுக்குள்ளே
குருடன் நானும்
உண்மையுள்ள மனிதரைத் தேடுகிறேன்
காணவில்லை.

மனிதரைத் தேடுகிறேன்
வெட்ட வெளிச்சத்திலே
விழியிரண்டைக் திறந்து
நானும் உண்மையுள்ள
மனிதரைத் தேடுகிறேன்.
காணவில்லை.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# (ஏ)மாற்றம்

ஏமாற்றங்களும் ஏமாறட்டும்
மாற்றம் தந்திடும்
மாற்றங்களால்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

பகுதி 36 ஆண்டாள் தொடர்ச்சி 06

ஆண்டாள்பேர் நாச்சியார்தம் திருமொழியில் பதினான்கு
தலைப்புகளில் ஒருநூற்று நாற்பத்து மூன்றெண்ணில்
பாடல்களில் காதற்சுவை பாசுரங்கள் கண்ணனவன்
புருஷனாக மாலடியார் யாவருமே காதலியர்
என்றமைந்து சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி
ஒப்பதுவாய் சுவைசேர்க்கும்! ஒவ்வொன்றிலும் பப்பத்து
கொண்டிலங்கும்! கண்ணனையே இணங்கச்செய் என்பதுவாய்
காமனையே வேண்டுவது அறுசீர்கொள் ஆசிரிய
விருத்தமாமே! மயனவனை சிறுமியர்தம் சிற்றில்லை
சிதையேலென வேண்டுவது கலிவிருத்த பாடல்களே!
நாலாயிர முதலாயிர பகுப்பினிலே காண்பதிது!
கன்னியரோடு கண்ணனவன் விளையாட்டை அறுசீர்கொள்
ஆசிரிய விருத்தமாக சுவைப்பாவால் வட்டித்தார்!
கூடல்சார் குறிப்பெல்லாம் திரட்டிவைத்தார் கலிவிருத்த
பாவகையில்! குயில்தன்னை விளித்திட்டு பாடுவன
குயிற்பத்தே! சீரேழின் ஆசிரிய விருத்தப்பா
மகிழ்வூட்டும்! தன்னையே மாதவன்தான் மணப்பதான
கனவதனை தோழியிடம் உரைப்பதாக நல்வாரண
மாயிரந்தான் கலிவிருத்த பாவமைப்பே! நற்பாஞ்ச
சன்னியத்தை பத்மநாபன் சுற்றமாக்கல் கலிவிருத்த
பாவகையே! பதிநான்கில் செம்பாகம் ஏழமையும்!
வில்லிபுத்தூர் வடபத்ர சாய்மீது பூமாலை
பாமாலை சூடிபடைத்தும் பாடிவழங்கி அரங்கனவன்
மாமையல் மன்றலினால் இணைந்ததனை எண்ணியதில்
திண்ணியளாய் எய்திட்டாள் என்றசேதி இலக்கெய்திய
பாங்குரைக்கும்! நற்றமிழை ஆண்டிட்ட நாயகியே!
திருப்பாவை முப்பதொடு நாச்சியார்தம் திருமொழியும்
கற்கண்டு கரைந்திட்ட சுவைப்பாலே அன்னதுவே!
குரலினிமை கைத்திறனும் மிக்குடையாள் கோதையே!
மற்றேழும் தொடர்ந்திட்டே மாமகிழ்வு காண்போமே!



கவிஞர் கணிக்காயன் ( இ. சே. இராமன்)

# உனைப் புரியாத பதர்கள்

ஆயிரம் இராமன் உனக்கு நிகரில்லை
உன் வம்சத்தில் உனைப் போல எவருமில்லை
சூரியனும் கண்டு திகைப்பான்
சூர்ப்பனகையும் உனை தொழுவாள்

கைகேயிக்கு உண்டு உன் மேல் பாசம்
சந்தேகிக்காதே! அதில் இல்லை வேஷம்
அவளுக்கு புரியாதது உன் மனது
ஏன் புரியாமல் போனது  அவள் அன்பு உனக்கு ?

தந்தை தயரதன் பாவம் வழுவினான்
காதலில் பாதி! காமத்தில் பாதி
பாசத்தில் பாதி! கோபத்தில் பாதி
பாவி மனுசனுக்கு பரதன் மனது புரியவில்லை

துலாக்கோல் போன்றவள் கோசலை
ஏனோ அன்று மட்டும் சாய்ந்தாள் ஒரு பக்கம்
கைகேயி சதி தெரியாதவனோ நீ ஏசினாள்
மனசாட்சியை ஓரம் வைத்து விட்டு பேசினாள் உனை



குலகுரு வசிட்டனும் அறிவிழந்து போனான்
போனது போகட்டும் அரசாள வா என்றான்
செங்கோலை விட குவளை விடம் மேல் என்றாய்
மருகி நின்றான்! விலகி சென்றான் வசிட்டன்

குகனும் குள்ளமாகிப் போனான்
குறுகுறு பார்வையால் உனை விழுங்கினான்
குலக்குன்று உனை சந்தேகித்தான்
புரியாதவன்! உனை அறியாதவன்!

சூரியனுக்கு கறையில்லை
தங்கத்திற்கு குறையில்லை
பரதா உனைப் போல எவருமில்லை
புரியாத பதர்கள் வெட்கித் தலை குனியட்டும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# என்னில் பாதி

கண்டதும் காதலென்று
உண்டானதல்ல நம்காதல்!



தனிமையில் தவிக்கையில்
உனக்குள் நானும்
எனக்குள் நீயும்
இருப்பதை உணர்ந்தோம்!

"நான்" தொலைந்து
நானும் நீயும்
மனத்தால் ஒன்றி
இணைந்து நாமானோம்!

புரிதலின்றி பிரிபவர்கள்
பெருகிவரும் இந்நாளில்
வேறுபட்டோம் அவர்களிடம்!

வேறுபாடுகளுடன் வாழ்வில்
வெவ்வேறாய்த் திகழாமல்
ஒருமித்தக் கருத்துடன்
வேராய்த் திகழ்வதால்
தழைக்கிறது இல்லறமும்!

இன்னார்க்கு இன்னாரென்று
எழுதிவைத்தானே தேவனன்று
என்றொரு பாடலுண்டு!

எனக்கு நீயும்
உனக்கு நானும்
கண்ணுக்கு இமைபோல
மண்ணுலகில் வாழ்கின்றோம்!

உன்னில் பாதியாய்
என்னில் பாதியாய்
நானும் நீயும்!

வானும் நிலவுமாய்
வாழ்ந்திருப்போம்!
மகிழ்ந்திருப்போம்!

*கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ*

# கோடையில் வெடிக்கும் காளான்

பொன் முட்டைகளிடும் பாலைவனத்தில்
கடமைக்கு மேல் உழைக்கும் கதிரவன்
அக்னி பூக்கள் தூவி
திறந்து விடும் கானல் நீரணை

பசுமை மருதாணி பூசிய
மருத சொர்க்கத்தின் கரங்கள்
கற்றுக் கொடுத்த நீச்சல்வித்தை
ராஜாளியாய்ப் பறந்து குதித்துக்
கரையேறுகையில் இல்லம்



களைப்பையெல்லாம் கழற்றிக்
கடலன்னையின் கையில் நீராடல்
குளிர்பதனியைக் கூட்டித்
துயிலுக்குப் பச்சைக்கொடியசைத்துத்
தனிமையோடு ஆழ்ந்த உறக்கம்

வைகறைப் பொழுதில்
விளைந்து நிற்கும் காந்தாரி மிளகாய்
திரும்பி படுக்கையில்
காமக்கிணற்றில் மிதக்கும்
நிலா அருகில்.

*கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்*

# வானவில்லும் வண்ணத்துப்பூச்சியும்

வாசம் மணக்கும் தோட்டத்தில் காணும் திசையெங்கும் புன்னகை வீசி மலர்ந்திருந்தன பூக்கள். அரும்புகளாக சில செடிகளில் இருக்க மொட்டுகளும் பல செடிகளில் மலர்ந்திருந்தன. கண்ணுக்குத் தென்படும் திசையெங்கும் பலவித நிறங்கள் எழுந்தும் நின்றும் நடனமாடிக் கொண்டிருந்தன. பச்சை வண்ணத்தைத் தாண்டி காட்சி தந்த நிறங்களுக்குள் பறந்தும் அமர்ந்தும் விளையாடிக் கொண்டிருந்தது வண்ணத்துப்பூச்சி ஒன்று. செடிகளை வீடாக்கியும் மலர்களை உணவாக்கியும் ஓய்விலிருந்த பட்டாம்பூச்சி அந்தி சாயும் வானத்தின் நிறத்தைக் கண்டதும் தன்னை மறந்து அதிசயிக்கத் தொடங்கியது. நமது இறக்கையில் இப்படியான நிறங்கள் இல்லையே என்று ஏக்கத்தில் தவித்த பட்டாம்பூச்சிக்கு அந்தியின் வண்ணத்தின்மீது அளவிலாது ஆசை பெருக அதை எப்படியாவது அடைந்துவிட வேண்டுமென பறக்கத் தொடங்கியது.



அந்தியின் நிறத்தைத் தேடி பறக்கத் தொடங்கிய பட்டாம்பூச்சியின் பார்வையில் பட்டது வானவில்லின் வளைவும் நிறங்களும். நிறங்களின் வளைவை இதுவரை கண்டிராத பட்டாம்பூச்சியின் மனதில் புதிதாக முளைக்கத் தொடங்கியது வானவில்லின் வண்ணங்களை அடையும் வெறி. நீண்ட பறத்தலில் வானவில்லைக் கண்டதும் பட்டாம்பூச்சிக்குள் தன் மீதான விருப்பம் வடியத் தொடங்கி வானவில்லையே ஆடையாக்கும் தீவிரம் வளரத் தொடங்கியது.

நிறங்களைக் கண்டு வானவில்லிடம் பேசத் தொடங்கியது பட்டாம்பூச்சி. "வானவில்லே உன்னிடம் இருக்கும் நிறங்களின் வளைவுகளும் நிறச்சேர்க்கையும் அருமையாக உள்ளன. எனது இறக்கையின் வண்ணங்களைவிட உன்னுடையதே அருமையாக உள்ளது. அவற்றை எனக்குத் தந்தால் நான் இன்னும் அழகாகிவிடுவேன்" என கெஞ்சத் தொடங்கியது பட்டாம்பூச்சி. தன்னிலை மறந்து உலகத்தின் நியதியை உணராது பிறவற்றைப் பார்த்து ஏங்கத்தொடங்கிய பட்டாம்பூச்சியின் நிலையைக் கண்டுகொண்ட வானவில் பகல் கூறத் தொடங்கியது.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

"பட்டாம்பூச்சியே நான் நிமிடத்தில் பிறந்து சில பொழுதிலேயே மறைந்துவிடுவேன். நிலையாமையின் பின்னே எனது வண்ணங்கள் சூரியனின் நகர்விற்கேற்ப மறையத் தொடங்கிவிடும். உன்னுடைய இறகோ உனது காலத்தின் ஓட்டத்தில் கடைசிவரை உன்னுடனேயே இருந்து உனக்குச் சிறப்பைத் தரும் பெருமையுடையது. உனக்குள் ஒளிந்திருக்கும் தனித்துவமான திறமையையும் சிறப்பையும் எப்போதும் மற்றவற்றுடன் ஒப்பிட்டுக் தொண்டு உன்னை நீயே தாழ்த்திக் கொள்ளாதே. உன்னுடைய வளர்ச்சிக்கு உனது உடலின் தகவமைப்புகளே உயர்வைத் தரும் என்பதை நீ உணர்ந்து கொள். அதுவே எப்போதும் உனக்கு வழி காட்டும்" என்று எடுத்துரைத்தது. மற்றவற்றைப் பார்த்து தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்ட பட்டாம்பூச்சி தன்னை உணர்ந்தபடி பூந்தோட்டத்தைத் தேடி பறக்கத் தொடங்கியது.



கவிஞர் இளையவன் சிவா, நரசிங்கபுரம்

# வாழ்க்கை என்னும் கவிதை


## புத்தக அனுபவம் — புதினம்

இக்கதை ஒரு நடுத்தர குடும்பத்தின் வாழ்க்கை போராட்டக் கதை. வெற்றி தோல்வி என்பது வாழ்வில் சாதாரணம்.ஆனால் கடந்து செல்லும் சம்பவங்கள் சில நேரம் மனதை பாதித்து விடும் என்பது கண்டிப்பாக மறுக்க முடியாத உண்மை. அப்படிப்பட்ட சில சம்பவங்களை உங்களுக்கு நாவலாகத் தந்துள்ளேன்.

"புவனா, இந்தப் பிள்ளையை நீ நல்ல முறையில் பாதுகாப்பாய் என்ற நம்பிக்கையில் தான் சிவா உன்னை கல்யாணம் பண்ணிக் கொண்டான். பாரு, சின்னக் குழந்தை. விரலை சூப்பிக் கொண்டு தூங்குகிறது. நீ தான் எல்லாமாக இருந்து பார்த்துக்கணும். நம்ம நிலைமை உனக்கு நல்லாத் தெரியும். உன் தங்கச்சியை இனி எப்படி கரையேற்றப்போறோமுன்னு நினைக்கும் போது தான் இப்பவே வயற்றில் புளியை கரைக்குது. நல்லா நடந்துக்கோ. சிவா மனம் கோணாமல் பார்த்துக்கோ. திவ்யா என்றால் அவனுக்கு எவ்வளவு உயிருன்னு உனக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கும்." ஜன்னல் வழியாக புவனாவின் அம்மா பிரசங்கம் செய்து கொண்டிருந்தாள். என்ற ஒரு பாசப் போராட்டத்தை தான் தந்துள்ளேன்.

இக்கதையை வாசித்து விட்டு எனக்கு விமர்சனம் தந்தாலும், இல்லையெனில் எனக்கு தலையில் குட்டு தந்தாலும், அல்லது எனக்கு சாமரம் வீசும் வாழ்த்து தந்திடினும், கண்டிப்பாக, மிகக் கண்டிப்பாக மகிழ்வேன்

ஆம்,நாமெல்லாம் முதலில் வாழக்கற்றுக்கொள்வோம். ஆனால் நான் கற்றுத்தர வரவில்லை. உங்களுக்குத் தெரிந்த நதியின் கரைவழியே, முதலில்வாழ்க்கற்றுக்கொள்ளுங்கள், எனச்சொல்லிக்கொண்டே. இந்த நூலுக்கு அழகிய அட்டை பட அமைப்பினை அமைத்து தந்த திரு. சங்கரநாராயணன் அவர்களுக்கும், நன்றி




திரு கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

## சிறுகதை



கிராம எல்லையில் ஒரு குடிசை. மின் தடை வேறு. அந்த வீட்டில் ஒரு சிறுவனும் அம்மாவும் வசித்தனர். அப்பா இல்லை.

"அம்மா, பசிக்குதும்மா"

"உடனே அடுப்பைப் பற்ற வைச்சு தோசை சுட்டுத் தர்றேன். கொஞ்சம் பொறுத்துக்கோ"அடுப்பைப் பற்ற வைக்க தீப்பெட்டி எடுத்தாள்.அதில் குச்சிகள் இல்லை.

"கடையும் தூரத்தில் இருக்கு".

"இப்போ என்னம்மா செய்யறது"

"செல்லம்! என் கையில் இருக்கிற இந்த பூதக்கண்ணாடி நெருப்பைத் தருமே"

"அப்படியா"

"நீ உன்னுடைய பழைய நோட்டை எடுத்திட்டு வா". கொஞ்சம் பேப்பரைக் கொண்டு வந்து தந்தவனை அருகிலமர்த்தி,"நான் செய்யறதைப் பார்" என்றாள் கண்ணம்மா.

தோட்டத்தில் உச்சி வெயில் சூரியன் ஒளிர்ந்தான். பழைய பேப்பரைக் கீழே போட்டு,அதன் மேல் கையிலிருந்த பூதக்கண்ணாடியை அப்படியே அசைக்காமல் காட்டினாள். சூரியவொளி கண்ணாடி வழியே ஓரிடத்தில் குவிந்தது.

சற்று நேரத்தில் இலேசாக புகைந்து எரிந்தது. உடனே அகல் விளக்குத் திரியில் விளக்கேற்றி உள்ளே எடுத்துபோய் அடுப்பைப் பற்ற வைச்சாள். உடனே..ஆச்சிர்யமாய் அம்மாவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்ட மணி, "எப்படிம்மா?" என்றான்.

சிரித்த கண்ணம்மா "இது, நான் பள்ளியிலே படிக்கும் போது எங்க டீச்சர் சைன்ஸ் பாடம் நடத்தும்போது செஞ்சிக் காட்டினாங்க. அப்போ நாங்களும் இப்படித் தான் ஆச்சர்யமாப் பார்த்தோம். சூரியவொளியைக் குவித்தால் நெருப்பு வரும்னு எங்களுக்குச் செஞ்சிக் காட்டனது மறக்காம மனசிலே பதிஞ்சுது.."

திருமதி கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

## சிறுகதை

எப்பவாது நெருப்பு வேணும்னா இப்படி செய்யறதுக்குப் பூதக்கண்ணாடி வாங்கனேன். அது இன்னிக்கு உதவிச்சு. சரி, உனக்கும் இதைப் படிக்கும் போது புரியும். அதை விடு, நீ ஒண்ணு கவனிச்சியா"

"என்னம்மா"

"நான் பூதக்கண்ணாடியை ஆட்டாமா ஒரே இடத்தில் பிடிச்சேன் கவனிச்சியா?"

"ஆமாம்மா"

"அது ஒரு பாடம் சொல்லிச்சு தெரியுமா?"

"மனசை ஒருமுகப் படுத்தி எந்தச் செயலைச் செஞ்சாலும் நமக்கு ஆற்றல் வரும்னு சொல்லிச்சு தானே"

"ஆமாம்மா"

"நீயும் எதைச் செஞ்சாலும் மனசை ஒருமுகப்படுத்தி செய். அது உனக்கு ஆற்றலையும், வெற்றியையும் தரும். சரி, இந்தா தோசை சாப்பிடு. நாளைக்கு பள்ளியும் திறக்கப் போவுது. நீயும் நல்லா படிக்கணும். பெரிய வேலைக்குப் போவணும்.சரியா"

"சரிம்மா" என்றவாறு ஆறாம் வகுப்பில் காலடி எடுத்து வைக்கும் மணி.



திருமதி கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# ந மு வேங்கடசாமி நாட்டார்

## கட்டுரை

### பிறப்பு




தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரியில் ஏப்ரல் 2, 1884 ல் தாயார் தைலம்மாள், தந்தை முத்துசாமி தம்பதிக்கு ஐந்தாம் மகனாக பிறப்பு. இவரின் இயற்பெயர் சிவப்பிரகாசம். ஆனால் இவர் ந.மு.வேங்கடசாமி என்றே தமிழுலகில் நிலைபெற்ற புகழைப் பெற்றிருக்கிறார்.

### படிப்பு

சிறு வயதில் அக்காலத் திண்ணைப் பள்ளியில் படித்தார். இக்கால நான்காம் வகுப்புக்குச் சமமான படிப்பு அது. திண்ணைப் பள்ளியிலும், தந்தையிடமும் எண்சுவடி, குழிமாற்று, நெடுங்கணக்கு, இலக்கம், நெல்லிலக்கம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, வெற்றிவேட்கை, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது போன்றவைகளைக் கற்றுத் தேர்ந்தார்.

### சுயம்பு

இவரின் தந்தை வேளாண் தொழில் செய்பவர். அதனால் பகலில் தந்தைக்கு உதவியாக கழனியில் வேலை செய்வதுடன், இரவில் படிக்கத் தொடங்கினார். இவருக்கு ஆசிரியர் என்று யாரும் இல்லை. ஆசிரியர் துணையின்றி நன்னூல் உள்பட தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சிற்றிலக்கியங்களையும் கற்றார்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய பாண்டித்துரை அவர்கள் அச்சங்கத்தின் சார்பில் செந்தமிழ்க் அக்கல்லூரியில் மூவகைத் தேர்வுகள் இருந்தன. 1. நுழைவுப் பண்டிதம் (பிரவேசப்பண்டிதம்) , 2. இடைநிலைப் பண்டிதம் (பாலபண்டிதம்), 3. பண்டிதம்
ஆறு ஆண்டுகள் படிக்க வேண்டிய இப்பண்டிதர் படிப்பை, மூன்று ஆண்டுகளில் முடித்து முதல் மாணவராகத் தேறினார். இவரின் அறிவாற்றலைக் கண்டு வியந்த பாண்டித்துரையார், இவருக்குத் தங்கத்தாலான அணி ஒன்றைப் பரிசளித்துப் பாராட்டியிருக்கிறார்.

திரு அ வில்சன் இதழாசிரியர்

**பணிகள்**

கோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர், எஸ்.பி.ஜி. கல்லூரின் தமிழாசிரியர், திருச்சி பிசப் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியராக பணியாற்றியவர் -

தமிழவேள் உமாமகேசுவரனார் பரிந்துரையில், கரந்தைத் தமிழ்கல்லூரியின் முதல்வராகப் பெறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றியுள்ளார்.

ந.மு.வேங்கடசாமி சிறந்த சைவநெறியாளர். சென்னை மயிலாப்பூர் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராக ஓராண்டு பொறுப்பு வகித்து இருக்கிறார்.

**நூற்கள் :**

உ.வே.சாமிநாதரால் ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்குக் கொண்டுவரப்பட்ட அடியார்க்கு நல்லார், அரும்பதவுரைகாரர் ஆகியோரின் உரையுடன் கூடிய சிலப்பதிகாரத்திற்கு உரை , மணிமேகலைக்கும் உரை.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநாநூறு உள்பட தண்டியலங்காரம், யாப்பருங்கலக் காரிகை, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவைகளுக்கு உரை.

'சேரன் செங்குட்டுவன்' என்ற சிறப்பான நூலை எழுதியவர் மூ.இராகவய்யங்கார். இவரின் இன்னொரு நூல் 'வேளிர் வரலாறு' இந்நூலைப் படித்த வேங்கடசாமி அவர்கள் அதிலுள்ள வரலாற்றுப் பிழைகளைச் சுட்டிக்காட்டித் தானும் ஒரு 'வேளிர் வரலாறு' நூலை எழுதினார்.

வேளிர் வரலாறு - சோழர் வரலாறு - கள்ளர் சரித்திரம் - நக்கீரர் - கபிலர் - கண்ணகி வரலாறும், கற்பும் மாண்பும் - கட்டுரைத் திரட்டு போன்ற நூல்கள் எழுதியிருக்கிறார்.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் தந்தை சரவண முதலியார் அவர்களும், ந.மு.வேங்கடசாமி அவர்களும் இணைந்து 'திருவிளையாடல் புராண'த்திற்கு உரை எழுதியிருக்கிறார்கள்.

# ந மு வேங்கடசாமி நாட்டார்

## கட்டுரை

**நூற்கள் :**

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் தந்தை சரவண முதலியார் அவர்களும், ந.மு.வேங்கடசாமி அவர்களும் இணைந்து 'திருவிளையாடல் புராண'த்திற்கு உரை எழுதியிருக்கிறார்கள்.




தமிழில் உள்ள வேர் சொற்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்க வேண்டும். புதிய சொற்களை உருவாக்க அல்லது கண்டுபிடிக்கத் தாமதமானால், வேற்று மொழிச் சொற்களைத் தமிழின் ஒலி இயல் இயல்புக்கு ஏற்பத் திரித்து வழங்க வேண்டும். எடுத்துக்காட்டு: ஜீசஸ் - இயேசு, ஜேக்கப் - யாகோபு என்று விளக்கம் தருகிறார் ந.மு.வேங்கடசாமி அவர்கள்.

**பட்டம்**

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 24.12.1940 ஆம் ஆண்டு இவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.



**மரணம்**

1944 ஆம் ஆண்டு மார்ச் 28, நாவலர் ந.மு.வேங்கடசாமி அவர்களை மரணம் ஆரத்தழுவி அழைத்துக்கொண்டு போய்விட்டது.

நன்றி --திரு எழில்.இளங்கோவன்,--மறக்கமுடியுமா நூல் & திருநெல்வேலி தொல்லியல் கழகம்

திரு அ வில்சன் இதழாசிரியர்

## நாளை
# நமதே

சவால்கள் இல்லையென்றால்
வாழ்க்கையில் நீங்கள்
முன்னேறவில்லை
என்றுதான் அர்த்தம்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே — முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa · www.aagaramuthala.com · aagaramuthala@gmail.com